# கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,

# அருப்புக்கோட்டை.

## அசல் வழக்கு எண். 48/2024

வாதிகள் தரப்பு 2 ஆவது சாட்சியின் வாக்குமூலம் (1873 ம் ஆண்டு சாட்சிய சட்டம் 44 வது விதியின் ஏற்பாட்டின்படி) திருமதி. R.சத்தியவதி, -உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

---

பெயர் : சின்னச்சாமி வா.சா.-2 தாலுகா :

த/பெ : தொழில் :

கிராமம் : வயது :

---

முதல் விசாரணை - 24-02-2026

கிராம நிர்வாக அலுவலர்.

நான் அருப்புக்கோட்டை தாலுகா சுத்தமடம் கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்து வருகிறேன். சாட்சிய அழைப்பாணையின்பேரில் சாட்சியம் அளிக்கிறேன். சாட்சிய அழைப்பாணையில் கூறியுள்ள ஆவணங்களின் அசல் மற்றும் சான்றிட்ட நகலை கொண்டு வந்துள்ளேன்.

சர்வே எண்.171/5, 171/6, 171/22 க்கான நத்தம் நிலவரி திட்ட தூய அடங்கல் பதிவேடு உண்மை நகல் அசலுடன் ஒப்பிடப்பட்டது **சா.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

மேற்படி சர்வே எண்களுக்கான சிட்டா உண்மை நகல் அசலுடன் ஒப்பிடப்பட்டது **சா.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

சர்வே எண். 171 க்கான புல வரைபடம் உண்மை நகல் அசலுடன் ஒப்பிடப்பட்டது **சா.சா.ஆ.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

SIVARANJINI P

Digitally signed by SIVARANJINI P
Date: 2026.02.24 17:29:29 +0530

சர்வே எண்.171/5 ல் வீடு உள்ளது. மேற்படி வீடு உத்தண்டராமு மகன் ராமநாதன் பெயரிலுள்ளது. சர்வே 171/6 பாதையாக உள்ளது. சர்வே எண்.171/22 இலவச பட்டா ராமநாதன் பெயரில் கொடுக்கப்பட்டுள்ளது. என்னிடம் காண்பிக்கப்படும் வா.சா.ஆ.3 ஆவணம் ராமநாதன் பெயரில் வருவாய் துறையினரால் கொடுக்கப்பட்டது. ராமநாதனுக்கு சர்வே எண்.171/22 ல் கொடுத்தது போக மீதி இடம் காலியிடமாக உள்ளது.

**நீதிமன்ற கேள்வி**

சர்வே எண்.171/22 க்கு நான்குமால் சொல்ல முடியுமா என்றால் வடக்கில் சுத்தமடம் ஊரணியும், கால்வாயும் உள்ளது. தெற்கே ராமநாதன் வீடு உள்ளது. கிழக்கே கருப்பையா பண்டாரம் வீடும், சரஸ்வதியம்மாள் காலி மனையும் உள்ளது. மேற்கே சர்க்கார் புறம்போக்கு காலி இடம் உள்ளது.

மறுவிசாரணை இல்லை

SIVARANJINI P

Digitally signed by SIVARANJINI P
Date: 2026.02.24 17:29:37 +0530